# ஈழ அகதிகள் தாயகம் திரும்ப மீண்டும் மறுப்பு

(சென்னை)

தமிழகத்திலுள்ள ஈழத் தமிழ் அகதிகளில் டலர் தாயகம் திரும்புவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர்.

தமிழகத்திலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அழைத்துவரும் நடவடிக்கையில் ஐ நா. அகதிகள் தூதரகம் தற்பொழுது ஈடுபட்டு வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 3 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 2 இதழ் 157
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17 — 07 — 1992

## 8 தமிழ் இளைஞர்கள் திருமலை நகரில் கைது

(திருமலை)

திருமலை நகரில் 8 தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை திரு

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவலில் பதுக்கல் குற்றவாளிகள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் நூற்றுக்கணக்கான பதுக்கல் குற்றவாளிகள் தமிழீழகாவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ★ புலிகளின் பலத்த எதிர்ப்பினால்

# படைநடவடிக்கைபின்னடைவு

# 'பலவேகய-2' கைவிடப்பட்டது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளும், புலிகளின் திடீர் அதிரடித் தாக்குதல்களும் படையினருக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகவும் இதனால் ஒபரேஷன் பலவேகய-2 படைநடவடிக்கைகள் தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

யாழ். குடாவை ஏனைய பகுதிகளுடனான தரைத்தொடர்பிலிருந்து துண்டிப்பதே தமது பிரதான நோக்கம் எனக் கூறித் தாக்குதலை ஆரம்பித்த படையினர் தற்போது அந்த நோக்கம் நிறைவேற முன்பே, கடந்த வெள்ளிக்கிழமையுடன் இத்தாக்குதல் முற்றுப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் ஒபரேஷன் டலவேகய – 2 ஆனையிறவு மேற்குப் பகுதியில் தொடருமென கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்திருந்தது ஆனால் இத்

4-ம் பக்கம் பார்க்க)

## ஒபரேஷன் பலவேகய-2 85 படையினர் பலி

(கொழும்பு)

'ஒபரேஷன் பலவேகய – 2' இராணுவ நடவடிக்கையால் 66 தரைப்படையினர் உட்பட 85 படையினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக் கேணியிலிருந்து ஆனையிறவு நோக்கிய இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு மீண்டும் கூடியது

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழு நேற்றுக் கூடியது. அது தொடர்ந்து இன்றும் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆளும் ஐக்கிய தேசியகட்சி எடுக்கவேண்டிய நிலைப்பாடு குறித்து பிரதமர் டி. பி. விஜேதுங்க தலைமையிலான குழு கூடி ஆராய்ந்தது.

தெரிவுக்குழுவில் ஆளும் கட்சி சார்பில் அங்கம் வகிப்போர்களில் ஒருவரான திரு. எஸ். தொண்டமான் தமிழ் கட்சிகளுடன் இணைந்து 4 அம் சத்திட்டத்தினை ஆதரிப்பது குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. (கே)

## யாழ். அரசாங்க அதிபரிடம் செஞ்சிலுவை சங்கம் மன்னிப்பு கோரியது

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக்கோரியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குமணக் கப்பலில் யாழ். அரச அதிபர் பயணம் செய்வதற்கு முப்படைத் தலைமைச் செய

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் இந்தியா பேசக் கூடாதாம்

(சென்னை)

இந்தியா புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்று தமிழக சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் 2-ம் லெப்டினன் வெற்றிக் கொண்டான் [செபஸ்தியாம்பிள்ளை கஸ்ரின் பேனுட், குரு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு நிலைபற்றி ஆராய பாதுகாப்பு சபை கூடியது

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து பாதுகாப்புச்சபை நேற்று முன்தினம் அவசரமாக கூடி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முப்படைத் தளபதிகள், கூட்டுப்படைத் தலைமையக தளபதிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், முக்கிய அமைச்சர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் புலிகள் மேற்கொண்டு வரும் திடீர், திடீர் அதிரடித் தாக்குதல்கள் குறித்தும் வடக்கு-கிழக்கு

[4ம் பக்கம் பார்க்க]

## ★ க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

நாடுமுழுவதிலும் அடுத்த மாதம் 1ம் திகதி முதல் நடைபெறவிருக்கும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் நேற்று குமண கப்பலில் வந்து சேர்ந்தன.

யாழ். மாவட்டத்திலிருந்து 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மேற்படி பரீட்சையில் தோற்றவிருக்கிறார்கள். இப்பரீட்சைக்குரிய மாணவர் அனுமதி அட்டைகள் உட்பட மற்றும் காகிதா

[4ம் பக்கம் பார்க்க]

## கரை ஒதுங்கிய சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம் தோட்ட கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் கரையொதுங்கிய ஆணின் சடலம் யாழ். வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. நேற்றுவரை இச்சடலம் அடையாளம் காணப்படவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சுடப்பட்ட தமிழக மீனவர் இருவரைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டதையடுத்து காணாமல்போனவருடைய சடலமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. [56]

## இந்திய ஜனாதிபதியாக சங்கர் தயாள் சர்மா தெரிவு

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் வாக்கு எண்ணிக்கைபின், இறுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டாக்டர் சங்கர் தயாள் சர்மா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது,

மொத்தம் பதிவான வாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

1992-ல்வெளிவந்தவதாமரைச்செல்வியின் ''விண்ணில் அல்ல விடிவெள்ளி'', சிதம்பர திருச்செந்திநாதனின் ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'', வாமதேவனின் ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' விற்பனையாகிறது. (சி6547)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### இடமாற்றம்

இதுவரை 15 வருட காலமாக யாழ். பஸ் நிலையம் முன்பாக இயங்கிவந்த டில்கா வாச் வேக்ஸ் எனும் ஸ்தாபனம் தற்சமயம் 284, ஸ்ரான்லி வீதியில் (வானவில் அருகாமை) இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (சி-6533)

### பாவித்த மணிக்கூடுகள்

பாவித்த தரமான மணிக்கூடுகள் வாங்கப்படும்—விற்கப்படும். பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் கடிகாரங்கள், றேடியோ, ரீ.வி, டெக் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6534)

### விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ் வாங்குகள், இரண்டு லாச்சியுடன் மேசை, மேசை, இரும்புக் கம்பியில் செய்த கேற்வகைகள், நிலைக்கதவுகள், யன்னல் கதவுகள், பனைமரங்கள், பலகைகள், ரீப்பைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (சி-6543)

## திறப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி வணிகவள நிலையத் திறப்பு விழாவும், கட்புல சாதனப் போட்டியும், சித்திரக் கண்காட்சியும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி எஸ் குமாரசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது:

யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வணிக வள நிலையத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (52)

0 0 0

(கொழும்புத்துறை)

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் ஆய்வுகூடத் திறப்பு விழாவும், ஆங்கில தினவிழாவும் பாடசாலை அதிபர் இ. சோதிநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சாவகச்சேரி கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு இ. கைலைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார். (154)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## அதிர்ஷ்டலாபச்சீட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளில் விற்பனை செய்யப்படுகின்ற அதிர்ஷ்டலாபச் சீட்டின் குலுக்கல் திகதி 15-07-92ம் திகதியிலிருந்து 15-08-92ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15-07-92.

(ஏ 2301)



## "சிக்கன முறையில் சிறந்த போஷாக்கு"

## கண்காட்சி

இடம்: சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

காலம்: 17-07-92 வெள்ளிக்கிழமை
18-07-92 சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி தொடக்கம்
மாலை 5 மணி வரை

## மில்க்வைற்

## காட்சிச்சாலைக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சீருடைகளையும், ஏனைய உடைகளையும் சீராகவும், துரிதமாகவும் சலவை செய்ய

மில்க்வைற் சலவைத்தூள்
300 கிராம் கொண்ட போத்தல்
சகாய விலை ரூபா 35/— மட்டும்

வாங்குவோர்களுக்குப் போஷாக்கு மிக்க அகத்திக்கன்று, கீரை விதை அன்பளிப்பு.

(எ-2297)


## கண்காட்சி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் நடாத்தப்படும் போஷாக்கு உணவு கண்காட்சி சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை இக்கண்காட்சி நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## நிவாரண முத்திரை விநியோகம்

(மானிப்பாய்)

நவாலி கிராம சேவையாளர் பிரிவில் குழந்தைகளுக்குரிய வறுமை நிவாரண முத்திரை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து முத்திரைகள வழங்கப்படும்.

முத்திரை சம்பந்தப்பட்டவர்கள் பிறப்பத்தாட்சிப்பத்திரம் மற்றும் உரிய ஆவணங்களுடன் மேற்படி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி தவத்திருதனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றம் தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடவுள்ளது.

இன்று 17ம் திகதி வெள்ளிக்கிழமை இக்கல்லூரியின் 'மத்தியூஸ்' மண்டபத்தில் காலை நிகழ்ச்சிகளும், 'மதுரம்' சதுக்கத்தில் இரவு நிகழ்ச்சிகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

0 0 0

(யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனியாண்டவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறுகிறது.

காலை 9-00 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 5-00 மணிக்கு சுவாமி வீதியுலாவும் இடம் பெறும்.

## இராசி பலன்

**17-07-1992**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு ஆடி 02)**

திருதியை முழுவதும் அவிட்டம் பி.ப 4-21 வரை, கரி நாள். இராகுகாலம் காலை 10-30 முதல் 12-00 வரை, சுப நேரம் காலை 6-00 மணி முதல் 7-30 வரை.

மேடம்: தியாக சிந்தை, உழிப்போக்கர் உதவி, மகிழ்ச்சி.

இடபம்: காரிய சித்தி, மகான் தரிசனம், தொழில் மேன்மை.

மிதுனம்: கட்டுப்படுதல், அடிமைநிலை, டணமுடை.

கடகம்: மனக்கலக்கம், அமைதிக்குறைவு, தொல்லை.

சிங்கம்: சுகபோஜனம், மனையாள் சிறப்பு, பயணம்.

கன்னி: விருந்துண்ணல், இன்பநிகழ்ச்சி, குடும்ப சுகம்.

துலாம்: ஜீரணக்கோளாறு, மனதில் கவலை, அலைச்சல்.

விருச்சிகம்: உறவினர் சச்சரவு, மயக்கம், வாய்த்தர்க்கம்.

தனுசு: மனத்தெளிவு, காரியச் சுணக்கம், தாய்ப்பாசம்.

மகரம்: அந்நியர் தலையீடு, கல்விச்செலவு, குளப்பம்.

கும்பம்: புதிய சிந்தனை, தொழில்வாய்ப்பு, விவேகம்.

மீனம்: புத்திபேதமை, மனச்சஞ்சலம், ஏமாற்றம்.

— ஜோஸ்யர்

# கட்டிடம் இடிந்து வீழ்ந்து 20 பேர் உயிரிழப்பு

(சிம்லா)

ஹிமாலய பிரதேசத்தின் சிம்லா நகரத்தின் ஒரு பகுதியில் 5 மாடிக்கட்டிடம் இடிந்து விழுந்ததில் 20 பேர் பேர் இறந்துள்ளனர்.

40 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தோரில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த கோர விபத்து நேரிட்ட சமயத்தில் அந்த கட்டிடத்தினுள் 70க்கு மேற்பட்டோர் இருந்தனர்.

இந்த இடிபாடுகளுக்கடியில் சிலர் உயிருடனும் இருக்கலாம் என்ற நோக்கிலும் மேலும் சடலங்களை தேடும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் விபரம் சேகரிப்பு

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் வலிந்துதவும் சமூகசேவை ஒழுங்கமைப்புகள் என்பவற்றின் பெயர்ப்பட்டியல்கள் யாழ். சமூகசேவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இம் மாவட்டத்திலுள்ள மேற்படி ஸ்தாபனங்களின் விபரங்களை திரட்டுவதற்காகவும் பதிவு செய்யப்படாதவற்றை பதிவு செய்வதற்குமாகவே சமூகசேவைத்திணைக்களம் இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

எனவே மேற்படி ஸ்தாபனங்கள் பின்வரும் விபரங்களை ஒரு வாரகாலத்துக்குள் மேற்படி திணைக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

நிறுவனத்தின் பெயர், முகவரி, நிறுவனத்தின் நோக்கங்கள், நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருப்பின் பதிவிலக்கம் அல்லது கோவை இலக்கம், பதிவுப்பத்திரத்தின் நிழற்பிரதியை இணைக்கவேண்டும்.

## வீடமைப்புத் திட்டம் குறித்து ஆராய்வு

(உடுப்பிட்டி)

பதினைந்துலட்சம் வீட்டுதிட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேசசெயலகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கான நிவாரண வீடமைப்புத் திட்டம் யாழ். தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிராம மட்டத்தில் கிராம முன்னேற்றச்சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுநிலையங்களில் தலா ஒரு வீடு என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டு, பிரதேசமட்டப்பிரிவில் மூன்று கிராம சேவை அலுவலர்பிரிவுகளுக்கு இரண்டு வீடுகள் என்ற விகிதத்தில் வழங்குவதற்கு பிரதேச மட்டக்குழு ஆராய்ந்து வருகிறது. (150)

## இந்து இளைஞர் மன்றம் இல்லாத குறை நிவர்த்தியானது

(கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் சமயப் பணியாற்ற இந்து இளைஞர் மன்றம் ஒன்று இல்லாத பெரும் குறை நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது.

இவ்வாறு கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தில் அண்மையில் மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் க பொன்னம்பலம் கூறினார்.

இவ்வைபவத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் பேசுகையில்: உலகிலே தொன்மையும் வரலாற்றுமுக்கியத்துவமும் வாய்ந்த மதம் இந்துமதமாகும் என்றார். (83)

## விசேட வகுப்புக்கள்

(பருத்தித்துறை)

கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் 82 மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் சனி, ஞாயிறு, புதன் நாட்களில் பிற்பகலில் நடைபெற்றுவருகின்றன. கல்வியில் மிகப் பின்தங்கியுள்ள இந்த 82 மாணவர்களையும் கல்வியில் முன்னணியில் திகழவைக்கும் நோக்கமாகவே இம்மெல்லக் கற்போருக்கான விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் க. பொன்னையா தெரிவித்தார். (52]

## சத்துணவுத் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கான மாணவர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இலவச பால் வழங்கும் திட்டத்தை பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் அண்மையில் ஆரம்பித்துவைத்தார்.

மேற்படி வித்தியாசாலையின் அதிபர் கனகரெத்தினம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. (83)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவினால் எதிர்வரும் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும். இதில் பதிவுசெய்தோரும் பதிவுசெய்ய விரும்புவோரும் மானிப்பாய் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

கௌரவ செயலாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை
சண்டிலிப்பாய் பிரிவு

[2302]

## பரு. கடலில் கைதான இரு மீனவரும் விடுதலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இரண்டு மீனவர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு, பருத்தித்துறைத் துறைமுகத்தில் வைத்து விடுதலையாகினர்.

மயிலிட்டியைச் சேர்ந்த ஐ. சிவநேசசிங்கம், அ. விஜயராஜா ஆகிய இரண்டு மீனவர்களும், கடந்த 6ம் திகதி பருத்தித்துறைக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம், சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டனர். (52)

## 100 ஏக்கர் காணி தெரிவு

(வவுனியா)

வவுனியா இணைப்புபல்கலைக் கழக கட்டிடத்துக்கென நிரந்தர கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக பேயாடிக்கூளாங்குளம் பகுதியில் 10) ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இவ்விடத்தை நேரடியாக சென்று பார்வையிட்ட கல்லூரி அதிகாரிகள் செய்த சிபார்சை கல்லூரின் முகாமைத்துவ குழு ஏற்றுக்கொண்டுள்ளது. (கே)

## வண்ணை சிவன் கோவில் புதிய தேர் வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி திருக்கோவில் (வண்ணை சிவன் கோவில்) கொடியேற்றம் இம்மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

தேர்த்திருவிழா இம்மாதம் 31ம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தத்திருவிழா ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி சனிக்கிழமையும், திருவூஞ்சல் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறவுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட தேர் வெள்ளோட்ட விழா இம்மாதம் 30ம் திகதி வியாழக்கிழமைநடைபெறும். (சு)

## ‘எமதுபோராளிகள் தீரமுடன் போராடுகிறார்கள்’ —இளம்பரிதி

[பண்டத்தரிப்பு]

‘‘இராணுவ நடவடிக்கைகள் மூலமும் பொருளாதாரத் தடைகள் மூலமும் எமது தாயக மீட்புப் போராட்டத்தை ஸ்ரீலங்கா அரசு நசுக்கிவிட முடியாது.

நாம் சோற்றுக்காகப் போராடவில்லை. சுதந்திரத்திற்காக உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது போராளிகள் உறுதியோடு அடிபணியாது களத்தில்நின்று தீரமுடன் போராடி வருகின்றார்கள்.’’

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களான 27 வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறுகுறிப்பிட்டார்.

திரு. இளம்பரிதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது: போராட்ட களத்தில் எதிரியுடனான நேரடி மோதல்களில் வீரச்சாவை தழுவிக் கொண்ட எமது வீரவேங்கைகளின் தீரச் செயல்களும் ஒவ்வொரு சரித்திரம். உலகில் மிகவும் வியக்கத்தக்க விதத்தில் இவ்வாறு தன்னுயிரைத் துச்சமென்று மதித்து எதிரிக்கு இழப்புகளை ஏற்படுத்தும் எமது வீரர்களின் தியாக வரலாறு பற்றி எமது மக்கள் பெருமை கொள்ள வேண்டும். (78)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

1992-ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு உயிரியல் பாடத்திற்குத்தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 20ம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ். சுந்தரலிங்கம் இக்கருத்தரங்கிலே கருத்துரைகளை வழங்குவார். (52)

0 0 0

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களால் நடாத்தப்படும் பாலர் பாடசாலை முயற்சியில் ஈடுபட கடன் வழங்கும் திட்டம் பற்றிய கருத்தரங்கு சமாசத் தலைவர் திரு. ச. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சி. இரகுலேந்திரன் கடன் வழங்கும் திட்டம்பற்றி கருத்துரைகள் வழங்கினார்.

இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் உள்ளூராட்சிதிணைக்களத்தில் விரைவில் நடைபெற உள்ளது.

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமான தென்புலோலி தான்தோன்றி உபய கதிர்காம கந்தனின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தின் வருடாந்த அம்பாள் உற்சவம் இம்மாதம் 23-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம்மாதம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை கைலாய வாகனமும் 30-ம் திகதி வியாழக்கிழமை சப்பறமும் வெள்ளி தேர்த்திருவிழாவும் சனி, தீர்த்தத் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத்துடன் மஹோற்சவம் நிறைவு பெறுகின்றது.

புதிதாக உருவாக்கப்பட்ட கைலாய வாகனம் கொடியேற்றத்தினத்தன்று வெள்ளோட்டம் விடப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. [சு)

## உபஉணவுப் பயிர்ச்செய்கை

[அரியாலை]

அராலிப்பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடையைத் தொடர்ந்து பெரிய வெங்காயம், பயறு, உழுந்து, கௌபி முதலிய உபஉணவுப் பயிர்ச் செய்கையை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். [59]

## ஆங்கிலதின விழா

(பருத்தித்துறை)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய ஆங்கிலதின விழா வித்தியாலய அதிபர் க. பொன்னையா தலைமையில் அண்மையில் நடைபெற்றது,

இவ் விழாவிலே உடுப்பிட்டி கொத்தணி அதிபர் ந. அன்னராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர். (52)

## விருத்தப்பா ஓதற்போட்டி

(வட்டுக்கோட்டை)

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த ‘சகலகலாவல்லி மாலை’ விருத்தப்பா ஓதற்போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 12, ஆண்டு 13 வகுப்புக்களில் பயின்றுகொண்டிருக்கும் மாணவர்களுக்கிடையே மாத்திரம் இந்தப்போட்டி நடாத்தப்படும்.

கொத்தணி, கோட்ட, மாவட்ட மட்டத்தில் ஆண்கள் வேறு பெண்கள் வேறாக நடத்தப்படும் இந்தப்போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து மூன்று ஆணும், மூன்று பெண்ணும் மாத்திரம் கலந்துகொள்ளலாம்.

இப்போட்டி கொத்தணி மட்டத்தில் 10-9-92லும், கோட்ட மட்டத்தில் 20-9-92லும், மாவட்ட மட்டத்தில் 30-9-92லும் நடைபெறும். (139)

## இடம்பெயர்ந்த குடும்பங்கள் கணக்கெடுப்பு

(உடுவில்)

வெளி மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் குடும்பங்கள் பற்றிய மீளாய்வுக் கணக்கெடுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மீளாய்வுக் கணக்கெடுப்புக்கள் கிராம சேவையாளர்களால் மேற்கொள்ளப்பட இருப்பதால் வெளி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் வாழும் குடும்பத்தவர்கள் தத்தம் கிராம சேவையாளர்களை உடனடியாகச் சந்திக்குமாறு உதவி அரசாங்க அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (109)

## வைத்திய அத்தாட்சிப்பத்திர சிபார்சுக்குத் தடையில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சித்த, ஆயுள்வேத வைத்தியர்கள் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 14 தினங்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் போது அதற்கு கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி சிபார்சு செய்வதற்கு எவ்வித தடையையும் தாம் விதிக்கவில்லை என்று கொழும்பிலுள்ள சுதேச வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது.

வடஇலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி சுதேசவைத்திய அமைச்சுக்கு கடந்த மாதம் இதுதொடர்பாக அனுப்பிய கடிதத்திற்கே இவ்வாறு பதில் அனுப்பப்பட்டுள்ளது. (72)

## பாராட்டுப் பத்திரங்கள் அனுப்பிவைப்பு

(பண்டத்தரிப்பு)

கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையில் உத்தியோகத்தர்களாகசேவையாற்றியவர்களுக்குகொழும்பிலுள்ள தலைமைப்பீடம்பாராட்டுப் பத்திரங்களை முதலுதவிப் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பிக்கு அனுப்பிவைத்துள்ளது.

அத்துடன் சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கானநியமனக் கடிதங்களும் தலைமைப் பீடத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் பலர் தங்கள் நிரந்தர இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்ததினால் இக்கடிதங்களை விநியோகிக்க முடியாது இருப்பதாகவும், ஆகவே யாழ்.லங்கா ஆயுள்வேதவைத்தியக்கல்லூரியிலுள்ள தமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தமக்கான கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (72)

## மினிவிஞ்ஞான ஆய்வுகூடம் திறந்துவைப்பு

(ருத்தித்துறை)

வடமராட்சிக் கல்விக்கோட்டப்பகுதிக்கான ‘‘மினி விஞ்ஞான ஆய்வு கூடம்’’ கரணவாய் மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதற்கான உபகரணங்களை கல்வித் திணைக்களம் அனுப்பிவைத்திருக்கின்றது.

இம்மினி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் 6ம் ஆண்டுதொடக்கம் 11ம் ஆண்டுவரையான விஞ்ஞான மாணவர்கள் பரிசோதனைகளைச் செய்யக்கூடிய விஞ்ஞான உபகரணங்கள் உள்ளன. இந்த ஆய்வு கூடத் திறப்பு விழா கரணவாய் மகா வித்தியாலய அதிபர் ச. சச்சிதானந்தம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வடமராட்சி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. ச. செலைத்துரை இந்த ஆய்வு கூடத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இதன் மூலம் இப்பகுதிகளில் உள்ள விஞ்ஞான மாணவர்கள் பல நன்மைகளை அனுபவிப்பார்கள் எனவும் இம்மினி ஆய்வுகூடம் பல பாடசாலைகளுக்கும் இடம் பெயர்ந்து நடமாடும் ஆய்வு கூடாமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## உணவுப் பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மூன்றுவது கட்ட உணவு முத்திரைக்கான உணவுப்பொருள் விநியோகம் இவ்வாரம் தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இடம்பெயர்ந்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கென புதிதாக திறக்கப்பட்டவிசேட கிளைகளில் இந்த உணவு முத்திரைக்கான உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

## அதிபர் நியமனங்கள் உறுதிப்படுத்தப்படும்

(வட்டுக்கோட்டை)

போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு 1.6.1989 முதல் முதலாம் இரண்டாம். மூன்றும் தர அதிபர்களாக நியமனம் பெற்றவர்களது பதவிகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

இப்பதவிகளைப் பெற்ற பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமை புரிவோரிடமிருந்து விபரங்கள் தேவைப்படுகின்றன. இத்தகைய அதிபர்கள் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட நிர்வாக அதிகாரி திரு. எஸ். சபாநாதனிடம் தமது முழு விபரங்களையும் ஒப்படைக்குமாறுபிரதிக்கல்வி பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூடியவிரைவில் விபரங்களை ஒப்படைக்காத அதிபர்களது பதவிகள் உறுதிப்படுத்தப் படுவது தாமதமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (139)

## கட்டிடம்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பணியிலும் மீட்புப் பணியினர் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு கடும் மழையும் பெய்து வருகின்றது. [கே)

## அபிவிருத்திச்சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. அபிவிருத்திச்சபை பொதுக்கூட்டம் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும். புதிய சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

## விளையாட்டு விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை ‘ராஜன் கதிர்காமர் விளையாட்டுக் கழகம்’’ விளையாட்டு விழா ஒன்றை நாளை 18ம் திகதி சனிக்கிழமை அராலி வள்ளியம்மை வித்தியாலயத்தில் திரு. கே. தவராசா தலைமையில் நடத்தவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை லயன்ஸ் சழக முன்னாள் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான டாக்டர் ரி.பகீரதன் கலந்து கொள்ளவுள்ளார். (139)

## 1983-ம் ஆண்டு நடைபெற்ற
# கலவரத்தில் பாதிக்கப்பட்ட
## அரசு ஊழியர்களுக்கு நஷ்டஈடு

[யாழ்ப்பாணம்]

1983-ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினுலும், இராணுவ நடவடிக்கைகளினுலும் சேதமடைந்த அரசாங்க ஊழியர்களின் வீடுகளுக்கும், சூறையாடப்பட்ட பொருட்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் 1987-ம் ஆண்டுக்குப்பின் பாதிப்புக்குள்ளான அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகின்றது.

1983-ம் ஆண்டிலிருந்து மேற்படி சம்பவங்களினுல் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென்று யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்ததன் பேரிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

## நாளை
## ஆங்கிலப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சை-1992 பகுதி-I நாளை சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ் கல்வித் திணைக்களத்தில் இன்று பெற்றுக்கொள்ளும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

### புலிகளுடன்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்: இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் புலிகள் அவரிடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றனர். 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகைக்கு திரு. அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டியில் எதுவும் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்றும் அவர் சட்டசபையில் உரையாற்றும் போது கூறினுர். (கே)

## இருநாவுக்கரசு கைதாகி உடன் விடுதலையானுர்

[சென்னை]

முன்னுள் தமிழ்நாடு மாநில அமைச்சரும் அண்ணு புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவருமான திரு. திருநாவுக்கரசு நேற்று காவல்துறையினரால் சென்னையில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

திரு. திருநாவுக்கரசு 1986 ம் ஆண்டு அக்டோபர் முதல் 1988 ம் ஆண்டு ஜனவரி வரை வீட்டுவசதி துறை அமைச்சராகஇருந்தபோது21கோடியே 45 லட்சம் ரூபா ஊழில்புரிந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் நேற்றுக்காலை அண்ணுநகரில் அவரின் இல்லத்தில் கைது செய்யப்பட்டார்.

இவர் அமைச்சராக இருந்த போது இவருக்கு நேர்முக உதவியாளராக இருந்த பாரத் என்பவரும் நேற்று கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் நேற்றுமாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

பழைய சட்டத்தின்கீழ் இவர்களை காவலில் வைக்க முடியாது என்று தீர்ப்பு அளித்து நீதவான் இவர்களை விடுதலை செய்தார். (மா)

### வடக்கு-கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லையோர கிராமங்களினதும் பாதுகாப்பு குறித்தும் இங்கு தீவிரமாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### இந்திய
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் திரு. சங்கர் தயாள் சர்மாவுக்கு 64.78 சதவீத வாக்குகளும், பேராசிரியர் ஸ்வெல்லுக்கு 33.21 சதவீத வாக்கும் கிடைத்தது

சுயேட்சை வேட்பாளர் திரு. ஜோகிந்தர் சிங்குக்கு 3 சட்டமன்ற உறுப்பினர்களும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரும், போட்டியிலிருந்துவிலகியதிரு. ராம் ஜெத்மலானிக்கு 11சட்டமன்ற உறுப்பினர்களும் 2 எம். பி. க்களும் வாக்களித்தனர். 67 வாக்குகள் செல்லுபடியற்றவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனதாதள், பாரதிய ஜனதா கட்சியிகளின் ஆதரவு பெற்ற ஜனுதிபதி வேட்பாளர் ஜி ஜி. ஸ்வெலை டாக்டர் சர்மா நேரடி போட்டி மூலம் தோற்கடித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1918 ம் ஆண்டு போபாலில் பிறந்த சங்கர் தயாள்சர்மா இந்தியாவின் 9வது ஜனுதிபதியாகிருர். (மா-சி)

### ஒபரேஷன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கையில் புலிகளின் தரைத்தாக்குதலில் 66படையினர் கொல்லப்பட்டதாகவும், சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்த 19படையினர் கொல்லப்பட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. [சி]

### யாழ். அரசாங்க
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லகம் மறுப்புத்தெரிவித்துள்ளது என்று தவறுதலாக தமது யாழ். கிளை பிரதிநிதிகள் தெரிவித்த கூற்றுக்கும், அதனுல் அரச அதிபருக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கும் தாம் மன்னிப்புக்கேட்டுக்கொள்வதாக கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்த செய்தியை யாழ் நகரிலுள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரி ஒருவர் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபரிடம் நேரில் ஒப்படைத்து, தமது தவறுக்கு தாம் மன்னிப்புக்கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இன்று புறப்படும் குமணக் கப்பலில் யாழ். அரச அதிபர் கொழும்புக்கு மீண்டும் பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது. (வி)

## நாலு பொலிஸார்
# கைதாகி விசாரணை

(வவுனியா)

வட பகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுசெல்ல அனுமதித்த 4 பொலிஸ்காரரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெருந்தொகையான பற்றறிகள், கற்பூரக்கட்டிகள், வாகன உதிரிப்பாகங்கள் தாண்டிக்குள தடைமுகாமுக்கூடாக வடபகுதிக்கு எடுத்துச் செல்ல இவர்கள் அனுமதித்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தாண்டிக்குளம் தடைமுகாமில் கடமையில் இருந்த இந்த நால்வரும் இரகசியப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (கே)

## நேற்று வந்த குமண கப்பல் இன்று கொழும்பு புறப்பாடு

[யாழ்ப்பாணம்]

திருமலையிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் கொழும்பிற்கு சிகிச்சை பெறச் சென்றவர்களில் 15 பேரையும் ஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறை வந்துசேர்ந்தது.

இக்கப்பலில் கொழும்பு சென்றிருந்த யாழ். போதனு வைத்தியசாலை நிபுணர் திரு. ஆனந்தராசா, பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி ஆகியோரும் இக்கப்பலில் திரும்பியிருந்தனர்.

இன்று மீண்டும் கொழும்பு செல்லவிருக்கும் குமண கப்பலில் 40 நோயாளர்கள் செல்லவுள்ளதுடன் தபால்பொதிகளும் எடுத்துச்செல்லப்படவுள்ளது.

யாழ். அரச அதிபரும் கல்விப் பணிப்பாளரும் இக்கப்பலில் கொழும்பு செல்லலாம் எனவும் தெரியவருகிறது. (56)

### க. பொ. த.
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திகள் அனைத்தும் நேற்று குமண கப்பலில் வந்துசேர்ந்துள்ளன.

இப்பரீட்சைக்குரிய வினுத்தாள்களும் அவ்வப்போது விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டுவரப்பட்டு பின்பு அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டு வருவதற்கும் முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அனுமதி அட்டைகள் இன்றுமுதல்பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8

## வைத்தியர் சங்கம்
## அரசுக்கிடையே முரண்பாடு

[கொழும்பு]

வைத்தியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசு இன்று ஜனுதிபதி பிரேமதாசாவிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

வைத்தியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கி சம்பள உயர்வுகளை சுகாதார அமைச்சு வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தாங்கள் குதிக்கவுள்ளதாக இணைந்த தொழிற் சங்க செயற்குழு முடிவு செய்துள்ளது. (மா)

## மக்கள் இடம்பெயர்வு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினுல் வவுனியா - மன்னுர் எல்லைக் கிராமங்களில் வசித்த மக்கள் இடம் பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இச் ஷெல் தாக்குதலினுல் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. [ரி]

### 8 தமிழ் இளைஞர்கள்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மலை நகரப் பகுதி சிறிலங்கா பொலிஸாரால் சுற்றி வளைத்துத்தேடுதல் நடத்தப்பட்டது

இத்தேடுதலின் போது இராணுவ கட்டிப்பாட்டுப் பிரதேசத்தில் அறிமுக அடையாள அட்டை இல்லாத காரணத்தினுலே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தனித்தனியாகக் கைது செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்த அறிமுக அட்டைகள் பொலிஸாரால் பறித்தெடுக்கப்பட்டு கிழித்தெறியப்பட்டபின்னரே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. [ரி]

### தடுப்புக் காவலில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மண்ணெண்ணை, தேங்காய் எண்ணை சவர்க்காரம்போன்ற பொருட்களை பதுக்கிவைத்து வியாபாரம் செய்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவார்கள்.

பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை அறிவித்த பின்னரும் பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டவர்கள் என்று காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்தார். (ரி)

### வீரச்சாவு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நகர்],முருகவேல்[தங்கலிங்கம் கோணேஸ்வரன், இணுவில்] ஆகியோரும், கடந்த 5-ம் திகதி கட்டைக்காட்டில் நடைபெற்ற நேரடிமோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த கதிரவன் (குணசேகரம் நகுலேந்திரன், அரியாலை) என்பவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### புலிகளின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முற்றுப்பெற்று விட்டதாக நேற்று கேர்ணல் சரத் முனசிங்க திடீரென அறிவித்துள்ளார்.

இதன்மூலம் இந்த நடவடிக்கையை தொடர முடியாதவொரு நிலை ஏற்பட்டிருக்கலாமென கூறப்டுகிறது. (சி)

## ஷெல் தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இச் ஷெல்கள் பளைப் பகுதியில் விழுந்து வெடித்தன.

### உதைபந்தாட்டம்
## இன்று இறுதியாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவினுல் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் குருநகர் மஞ்சள் கழகமும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் மோதுகின்றன,

நேற்று நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகம் 2-1 கோல்களால் சென்.மேரிஸ் கழகத்தையும், குருநகர் கழகம் 2-0 கோல்களால் சென் நீக்கிலஸ் கழகத்தையும் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன. [வி]

## சென். பற்றிக்ஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவந்த 15 வயதுக்குட்பட்டவர்களின் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென்பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 171 ஓட்டங்களைப் பெற்றது. சென் ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 139 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

### ஈழ அகதிகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்காவில் இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணமுள்ளதால் அங்கு வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுப்போய்விட்டது. மீண்டும் அங்கு சென்று வாழ முடியாது எனவும் தம்மை திருப்பி அனுப்பவேண்டாம் என்றும் ஈழ அகதிகள் ஐ.நா. தூதரகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகதிகள் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஐ. நா. அதிகாரிகள் சொந்த விருப்பத்தின் பேரில் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள அகதிகளை மட்டும் தாயகம் அழைத்துச்செல்வதற்கு உதவுவதாகத்தெரிவித்தனர்.

இதனையடுத்தே சொந்த விருப்பத்தின் பேரில் தாயகம் செல்ல விருப்பம் தெரிவித்துள்வர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் ஐ. நா. தூதரக ஏற்பாட்டின் பேரில் ஆறுயிரம் அகதிகள் விரைவில் தாயகம் அழைத்து வரப்படவுள்ளனர்.